**TNVR020010022020**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06-ஆம் நாள் வெள்ளிக்கிழமை
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.276/2020</u>

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக / காவல் சார்பு ஆய்வாளர்,<br>திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.549/2019 | |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | மணிமாலா, (46/19),<br>க/பெ.அந்தோணிராஜ்,<br>போஸ்ட் ஆபீஸ் ரோடு,<br>அனுப்பன்குளம்,<br>சிவகாசி. | |
| சம்பவம் நடந்த நாள் | | 10.11.2019 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 25.11.2019 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 26.11.2019 | 01.01.2020 |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 04.04.2024<br><br>இல்லை | |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 30.05.2022 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் | |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் | |

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 26.09.2023ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 26.09.2023ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 26.09.2023ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.4 05.12.2023ம் தேதி முதல் விசாரணை மற்றும் 09.02.2026 குறுக்கு விசாரணை<br><br>அ.சா.5 13.03.2024ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.6 04.04.2024ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 17.04.2024 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | Crmp.954/2026 dated. 06.08.2025 |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.G.நீர்காத்தலிங்கம், B.A., B.L., |
| எதிரிகளின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீதான சட்டப்பிரிவு 379 இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 ஆன சுமார் 1 கிராம் எடையுள்ள இதய மாடல் தங்க டாலருடன் கூடிய 2 பவுன் தங்க முறுக்கு செயின் ஒன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.27/2020 வழங்கப்பட்டு அதனை CRMP.No.43/2020 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான பொற்செல்வி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது 15.06.2020ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 02.03.2026-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.நீர்காத்தலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

**தீர்ப்புரை**

இவ்வழக்கின் புகார்தாரர் பொற்செல்வி என்பவர் திருவில்லிபுத்தூர் பஸ்நிலையத்தில் அவரது ஊருக்கு செல்வதற்காக, 10.11.2019 ம் தேதி மதியம் 03.30 மணிக்கு கோவில்பட்டி செல்லும் பஸ்சில் ஏறியபோது, புகார்தாரர் கட்டைப் பையின் உள்ளே மணிப்பர்சில் வைத்திருந்த ரூ.42,500/– மதிப்புள்ள, சுமார் 1 கிராம் எடையுள்ள இதயம் மாடல் தங்க டாலருடன் கூடிய சுமார் 2 பவுன் எடையுள்ள தங்க முறுக்குச் செயினை திருடி, புகார்தாரருக்கு சட்டப்பூர்வமான இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஆதாயம் கருதி திருடிச் சென்ற குற்றத்திற்காக திருவில்லிபுத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி எதிரி ஆஜராக, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி எதிரி மீதான குற்றச்சாட்டினை விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்தபடியால், எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அவரிடம் குற்றம் குறித்து வினாவிய போது எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறியதால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

**4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-**

(I) அ.சா.1 திரு.பொற்செல்வி தனது சாட்சியத்தில் தான் தற்போது கோவில் பட்டியில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 10.11.2019 அன்று தனது தோழி மாலதியின் தம்பி ராஜ்குமாரின் திருமணத்திற்காக இடையன் குளம் வந்திருந்ததாகவும், பின்னர் ஊருக்கு கோவில்பட்டி செல்வதற்காக பஸ் ஏறுவதற்காக திருவில்லிபுத்தூர் பேருந்து நிறுத்தத்தில் அன்றைய தினம் மதியம் 3.30 மணியளவில் நின்று கொண்டிருந்ததாகவும், பஸ் வந்தவுடன் அதில் கூட்டமாக இருந்ததால் தான் முன்வாசல் வழியாக ஏறி உள்ளே போனதாகவும், அது கே.எஸ்.ஆர். பஸ் என்றும், தான் அப்போது தனது கையில் கட்டைப்பை ஒன்று வைத்திருந்ததாகவும், அதில் மணிப்பர்ஸ் ஒன்று வைத்திருந்து அதற்குள் 1 கிராம் எடையுள்ள ஹார்ட்டின் மாடல் டாலருடன் சேரந்த 2 பவுன் தங்க முருக்கு செயின் வைத்திருந்ததாகவும், பஸ்ஸில் ஏறி உள்ளே சென்று டிக்கெட் எடுப்பதற்காக மணிப்பர்ஸ்சை பார்த்தபோது தான் தனது கட்டைப்பையில் வைத்திருந்த பர்ஸ்சை காணவில்லை என்றும், பஸ்ஸில் உள்ள கூட்டத்தில் எல்லோரிடமும் கேட்டதாகவும், கிடைக்கவில்லை என்றும், ஊருக்கு போக வேண்டுமென்பதால் ஊருக்கு போய்விட்டதாகவும், வீட்டில் இருந்தவர்கள் தன்னிடம் சத்தம்போட்டு போலீசில் புகார் கொடுங்கள் என்று சொன்னார்கள் என்றும், அதனால் சுமார் 7 நாட்கள் கழித்து 25.11.2019 அன்று தனது கணவருடன் வந்து திருவில்லிபுத்தூர் நகர் கவல்நிலையம் வந்து புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தன்னுடையது தான் என்றும், அதை தான் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பப் பெற்றுக்கொண்டதாகவும், புகைப்படத்தில் உள்ள நகைதான் காணாமல் போன நகையாகும் என்றும், தனது நகையை திருடியது மணிமாலா என்று சொன்னார்கள் என்றும், அவர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், தனது திருடப்பட்ட நகையின் மதிப்பு சுமார்.45,000/- இருக்கும் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், புகைப்படத்திலுள்ள ஹார்டின் மாடல் டாலருடன் கூடிய தங்கச்செயின் ஒன்று அ.சா.பொ.1 என்று சாட்சியம்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.ஜசக்ராஜதுரை தனது சாட்சியத்தில் அ.சா.1 பொற்செல்வி தனது மனைவியாவார் என்றும், 10 ம் தேதி மாதம் நியாபகம் இல்லை 2019 வருடம் தனது மனைவி பொற்செல்வியை திருமண நிகழ்ச்சிக்காக அனுப்பி வைத்திருந்ததாகவும், திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு தனது மனைவி ஊருக்கு வருவதற்காக திருவில்லிபுத்தூர் பஸ்ஸடாப்பில் பஸ் ஏறினார் என்றும், உள்ளே போய் பையில் வைத்திருந்த பிக்சாப்பர் பையை பார்த்தபோது அதில் இருந்த தங்கச்செயின் காணாமல் போயிருந்தது தெரியவந்தது என்றும், அது 4 கிராம் செயின் என்றும், உடனே தனக்கு போன் செய்து தகவல் சொன்னார் என்றும், தான் உடனே பேருந்தில் தேடிப்பார் என்று தன் மனைவியிடம் சொன்னதாகவும், அவர் தேடிப்பார்த்து கிடைக்கவில்லை என்று சொன்னார் என்றும், வீட்டிற்கு வந்துவிடு என்று சொன்னதாகவும், வீட்டிற்கு வந்து குடும்பத்தாரிடம் கலந்து பேசியபோது போலீசில் புகார்கொடுத்தால் காணாமல்போன செயின் திரும்பக்கிடைக்கும் என்று சொன்னார்கள் என்றும், அதனால் 25 ம் தேதி தாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், 26 ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து தங்களுக்கு போன் வந்தது என்றும், காணாமல் போன செயின் கிடைத்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், எனது மனைவி காவல்நிலையத்திற்கு சென்று நகையை அடையாளம் காட்டினார் என்றும், நகையை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பப்பெற்று கொண்டதாகவும், யார் எடுத்தார்கள் என்று தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தனது மனைவியின் செயின்தான் என்றும், அதை தனது மனைவி கழுத்தில் அணிந்திருப்பார் என்றும், அப்போது தான் பார்த்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.தமிழரசன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், 26.11.2019 ம்தேதி காலை 10 மணியளவில் தானும் தனது நண்பர் ஆஞ்சேயும் சிவகாசி ரோட்டிலுள்ள ஆர்.சி.சர்ச் முன்னாதல் உள்ள டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது திருவில்லிபுத்தூர் நகர் போலிசும் பெண் காவலருடன்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

அங்கு ரோந்து வந்தார்கள் என்றும், அப்போது ஒரு பெண் அங்குமிங்குமாக ரோட்டில் போய்க்கொண்டிருந்தார் என்றும், அப்போது தங்கள் முன்னிலையில் போலிசார் அந்த பெண்ணை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது போலிசிடம் அந்த பெண் தன் பெயர் மணிமாலா என்றும் அவரது பர்சில் வைத்திருந்த 5 1/2 பவுன் எடையுள்ள தங்க தாலியுடன் கூடிய செயினை போலிசிடம் எடுத்து ஒப்படைத்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள அ.சா.பொ.1 செயினை தான் மணிமாலா போலிசாரிடம் ஒப்படைத்தார் என்றும், மணிமாலா என்பவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்றும், இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை என்றும், போலிசார் தன்னிடமும் ஆஞ்சேயிடமும் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள் தாங்கள் கையெழுத்து போட்டதாகவும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.1 என்றும், அத்தாட்சி அசாஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்

(iv) அ.சா.4 திரு.பாஸ்டீன் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், 03.03.2019 ம் தேதி மாலை இந்திராநகர் அன்னை வேளாங்கன்னி சர்ச்சில் வைத்து போட்டுக்கொடுத்ததாகவும், போலீசார் அந்த இடத்தில் திருடுபோனது சம்மந்தமாக அந்த இடத்தை பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்தார்கள் என்றும், அதில் தானும், குமார் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டதாகவும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், பார்வை மகசர் அ.சா.ஆ.3 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு.கனகராஜ் தனது சாட்சியத்தில் தான் தற்போது கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக கடந்த 03.03.2019 ம் தேதி 14.30 மணிக்கு நிலையப்பொறுப்பில் இருந்தபோது பாட்டகுளம் மரியதவமணி மனைவி இன்னாசியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.138/2019 இதச பிரிவு 379 ன் கீழ் வழக்குபதிவு செய்ததாகவும், முதல் தகவல்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவினையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதில் ஒரு நகலை புலன் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், புகார் மனு அ.சா.ஆ.4 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.6 திரு.கருத்தப்பாண்டி தனது சாட்சியத்தில் தான் தற்போது சென்னை மாநகரம் ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 03.03.2019 ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கனகராஜ் என்பவர் இன்னாசியம்மாள் என்பவர் கொடுத்த புகார் மனுவினை பெற்று அந்த புகார் மனுவினை தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.138/2019 பிரிவு 379 இதச வாக வழக்கு பதிவு செய்து தனது புலன் விசாரணைக்கு வைத்தார் என்றும், தான் அதை அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாஸ்டீன் மற்றும் குமார் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், இவ்வழக்கில் சாட்சிகளான இன்னாசியம்மாள், மரியதவமணி, மேரிநிர்மலா, பாஸ்டீன், குமார் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கு தொடர் விசாரணையில் இருந்து வந்தநிலையில் 26.11.2019 ம் தேதி 10.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் கனராவங்கியின் அருகே நின்று கொண்டிருந்த மணிமாலா என்பவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ததில் 10.20 மணிக்கு சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் எதிரி மணிமாலா தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம்கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடம் குற்றஎண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியும், வாக்குமூலத்தின் அடிப்படையில் சிவகாசி சென்று துர்கையம்மன் கோவில் தெரு விஜயராஜ் மனைவி சண்முகலட்சுமி என்பவரிடம் இருந்து இவ்வழக்கு சொத்தான 5



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

1/2 பவுன் தாலியுடன் கூடிய தங்க முறுக்கு செயின் ஒன்றையும், குற்ற எண். 550/2019 வழக்கு சம்மந்தப்பட்ட மகாலட்சுமி அனுப்பன்குளம் சிவகாசி என்பவரிடம் இருந்து மணிமாலா என்பவரிடம் இருந்தும் பைனான்சில் இருந்து திருப்பி ஒப்படைக்கப்பட்ட செயினை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், பின்பு இவ்வழக்கு சொத்தை எதிரியுடன் 15.00 மணிக்கு நிலையம் வந்து உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு எதிரியை உட்படுத்தியதாகவும், வழக்கு சொத்தை படிவும்–91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, சாட்சிகள் தமிழரசன் மற்றும் அஞ்சே ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சாட்சி இன்னாசியம்மாள் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 379 இதச வாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும், வரைபடம் அ.சா.ஆ.6 என்றும், படிவம் –91 அ.சா.ஆ.7 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விசாரித்தபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை எனக் கூறிக் கொண்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>

அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 379–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

7. புகார்தாரர் பொற்செல்வி என்பவர் திருவில்லிபுத்தூர் பஸ்நிலையத்தில்



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

அவரது ஊருக்கு செல்வதற்காக, 10.11.2019 ம் தேதி மதியம் 03.30 மணிக்கு கோவில்பட்டி செல்லும் பஸ்சில் ஏறியபோது, புகார்தாரர் கட்டைப் பையின் உள்ளே மணிப்பர்சில் வைத்திருந்த ரூ.42,500/- மதிப்புள்ள, சுமார் 1 கிராம் எடையுள்ள இதயம் மாடல் தங்க டாலருடன் கூடிய சுமார் 2 பவுன் எடையுள்ள தங்க முறுக்குச் செயினை திருடி, புகார்தாரருக்கு சட்டப்பூர்வமான இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஆதாயம் கருதி திருடிச் சென்றார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8). அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9). எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது தனது வாதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறும் வாதிடப்பட்டது.

10). இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 10.11.2019 அன்று தனது தோழி மாலாதியின் தம்பி திருமணத்திற்காக இடையன்குளம் வந்திருந்ததாகவும், பின்னர் தனது ஊரான கோவில்பட்டி செல்வதற்காக திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், பஸ்ஸில் கூட்டமாக இருந்ததால், முன்வாசல் வழியாக ஏறி தான் உள்ளே போனதாகவும், அது கே.எஸ்.ஆர்.பஸ் என்றும், தான் கையில் வைத்திருந்த கட்டைப்பையில் ஒரு கிராம் எடையுள்ள ஹாட்டின் மாடல் டாலருடன் சேர்ந்த இரண்டு பவுன் தங்க முறுக்கு செயினை மணிபர்ஸில் வைத்து கட்டைப்பையில் வைத்திருந்ததாகவும், பஸ்ஸில் ஏறி உள்ளே சென்று டிக்கெட் எடுப்பதற்காக கட்டைப்பையில் வைத்திருந்த பர்ஸை பார்த்த



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

போது அது காணவில்லை என்றும், பஸ்ஸில் உள்ள கூட்டத்திலுள்ள அனைவரிடமும் கேட்டதாகவும், கிடைக்காததால் ஊருக்கு போய்விட்டதாகவும், வீட்டில் இருந்தவர்கள் தன்னை சத்தம்போட்டு போலீசில் புகார் கொடுக்க சொன்னதாகவும், சம்பவம் நடந்து 7 நாட்கள் கழித்து 25.11.2019 அன்று தனது கணவருடன் வந்து திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தனது செயினை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டதாகவும், தனது நகையை திருடியது மணிமாலா என்று தன்னிடம் சொன்னதாகவும், அவர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் திருடப்பட்ட நகையின் மதிப்பு சுமார் ரூ.45,000/- இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

11. மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தான் ஏறியதாக சொல்லும் பேருந்தின் பதிவெண் தனக்கு தெரியாது என்றும், அன்றைய தினம் முகூர்த்த நாள் என்பதால் பேருந்து நிலையத்தில் ஆட்கள் கூட்டமாக இருந்ததாகவும், பஸ்ஸில் ஏறிய பின்பு டிக்கெட் எடுப்பதற்கு பையை பார்த்த போது தான் மணிபர்ஸ் காணாமல் போனது தெரியவந்ததாகவும், பர்ஸ்சை தான் கட்டைப்பைக்குள் வைத்திருந்ததாகவும், பர்ஸில் நகை மட்டும் வைத்திருந்ததாகவும், பேருந்து நிலையத்தில் ரோந்து பணியில் இருந்த போலீசாரிடம் தான் புகார் செய்யவில்லை என்றும், மேற்படி நகைக்கான ரசீதை போலீசார் விசாரணையில் கொடுத்ததாகவும், தான் கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் இருந்த ஏட்டையா எழுதியதாகவும், ஒரு வாரம் கழித்து தான் புகார் கொடுத்தாகவும், மறுநாளே காணாமல் போன செயினை போலீசார் தன்னிடம் காட்டியதாகவும், தன்னிடம் நிறைய நகையை போலீசார் காட்டியதாகவும், அதில் தான் தனது நகையை அடையாளம் காட்டியதாகவும், நகையை இவ்வழக்கின் எதிரி எடுத்தார் என்று போலீசார் சொல்லி தான் தனக்கு தெரியும் என்றும், அவரது ஊர், பெயர், விலாசம் எதுவும் தனக்கு தெரியாது என்றும், நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரியை பற்றிய விபரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.1ன் கணவரான அ.சா.2 தனது சாட்சியத்தில், 2019ம் வருடம் ஒரு மாதத்தின் 10ம் தேதி தனது மனைவியான அ.சா.1யை திருமண நிகழ்ச்சிக்காக அனுப்பி



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

வைத்ததாகவும், நிகழ்ச்சியை முடித்துவிட்டு தனது மனைவி ஊருக்கு வருவதற்காக திருவில்லிபுத்தூர் பஸ் ஸ்டாப்பில் பஸ் ஏறி உள்ளே போய் தான் கையில் வைத்திருந்த பையை பார்த்த போது, அதிலிருந்த தங்க செயின் காணாமல் போய்யிருப்பது தெரியவந்ததாகவும், அதன் எடை 04.00 கிராம் என்றும், உடனே தனக்கு தனது மனைவி போன் செய்து தகவல் சொன்னதாகவும், உடனே பேருந்தில் தேடி பார்க்குமாறு தான் கூறியதாகவும், தேடி பார்த்தும் கிடைக்காததால், வீட்டிற்கு வந்துவிடு என்று தான் சொன்னதாகவும், அதன் பின் வீட்டில் உள்ளவர்களுடன் கலந்து பேசிவிட்டு 25ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், 26ம் தேதி நகை கிடைத்து விட்டதாக காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் தகவல் தெரிவித்ததாகவும், தனது மனைவி காவல் நிலையத்திற்கு சென்று நகையை அடையாளம் காட்டியதாகவும், நகையை நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக்கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் தனது மனைவி நகை காணாமல் போனது தொடர்பாக எப்போது தனக்கு தகவல் சொன்னார் என்று தனக்கு நியாபகம் இல்லை என்றும், இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் போன் மூலம் தான் தன்னை விசாரித்ததாகவும், நேரடியாக விசாரிக்கவில்லை என்றும், தனது மனைவி அணிந்திருந்த 04.00 கிராம் எடையுள்ள பட்டை செயின் தான் காணாமல் போனதாகவும், தன்னையும் தனது மனைவியையும் 25.11.2019 க்கு பின் போலீசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 4 வருடங்களுக்கு முன்பு திருவில்லிபுத்தூர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், பொற்செல்வியின் நகை திருடு போனது சம்பந்தமாக தெரிந்த நபர்கள் இருந்தால் சாட்சிக்கு கையெழுத்து கேட்டதாகவும், அதனால் தான் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், தன்னுடன் முனியம்மாள் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும் கூறியுள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் போலீசாரிடம் கையெழுத்து செய்து கொடுத்த தாளில் என்ன எழுதியிருந்து என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

14. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 26.11.2019 ம் தேதி காலை 10.00 மணி அளவில் தானும், தனது நண்பர் ஆஞ்சேவும் ஆர்.சி.சர்ஜ் முன்பு உள்ள கடையில் டீ குடித்துக் கொண்டிருந்த போது, திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய காவலர்கள் ரோந்து வந்ததாகவும், அப்போது ஒரு பெண் அங்கும் இங்குமாக ரோட்டில் போய்கொண்டிருந்ததாகவும், அப்போது தங்கள் முன்னிலையில் போலீசார் அந்த பெண்ணை பிடித்து விசாரித்ததாகவும், அப்போது அந்த பெண் தன் பெயர் மணிமாலா என்று கூறியதாகவும், அவரது பர்ஸில் வைத்திருந்த தங்க செயினை போலீசாரிடம் எடுத்து ஒப்படைத்ததாகவும், மணிமாலா என்பவரை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் தானும் ஆஞ்சேவும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் நீதிமன்றத்தில் தனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் தான் சாட்சியம் அளித்ததாகவும், இவ்வழக்கின் எதிரியின் ஊர், பெயர், போன்ற விபரங்கள் தனக்கு தெரியாது என்றும், எதிரியை இதற்கு முன்பு தான் பார்த்து இல்லை என்றும், மேற்படி ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்ததாகவும், தனது முன்னிலையில் இவ்வழக்கின் எதிரி எந்த பொருள்களையும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 25.11.2019 அன்று பொற்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண்.549/2019 இதச பிரிவு 379 கீழ் வழக்கு பதிவு செய்து அதனை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் அதிகாரிகளுக்கும் அனுப்பிவிட்டு, அதன் நகலை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் கூறியுள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் குற்றமானது 10.11.2019 அன்று நடந்ததாகவும், காவல் நிலையத்தில் 25.11.2019 அன்று



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

புகார் கொடுக்கப்பட்டதாகவும், சம்பவத்திற்கு பின்பு 15 நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டதாகவும், புகாரை எழுதி தான் கொண்டு வந்து காவல் நிலையத்தில் கொடுத்ததாகவும், புகாரை யார் எழுதினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், முதல் தகவல் அறிக்கையை மறுநாள் நீதிமன்றத்திற்கு அனுப்பியதாகவும், திருடிய நபர் குறித்த அடையாளம் புகார் மனுவில் சொல்லவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.சா.5 பதிவு செய்து வைத்திருந்த குற்ற எண்.549/2019 வழக்கு கோப்பை 25.11.2019 அன்றே தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தது பற்றியும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததது பற்றியும், 26.11.2019 அன்று எதிரியை கைது செய்து சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், மணிமாலா அவருடைய மணிபர்ஸில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ஒரு கிராம் எடையுள்ள ஹாட்டின் மாடல் டாலருடன் கூடிய இரண்டு பவுன் தங்க முறுக்கு செயினை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், மேற்படி எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 3 வழக்குகளில் சம்பந்தப்பட்ட சொத்துக்களை சிவகாசி சென்று அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திய தாகவும், படிவம் 91 மூலம் வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சி பொற்செல்வி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பெற்றதாகவும், எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. மேலும் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் புகார்தாரர் புகார் கொடுக்கும் போது நகைக்கான ரசீது அல்லது வேறு ஆவணங்களை கொடுக்கவில்லை என்றும், இவ்வழக்கின் அத்தாட்சி திருவில்லிபுத்தூர் கனரா வங்கியில் வைத்து தயார் செய்யப்பட்டதாகவும், மணிபர்ஸ்சை அத்தாட்சியில் கைப்பற்றவில்லை என்றும்,



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நகையை மட்டும் கைப்பற்றியதாகவும், இவ்வழக்கிற்கு முன்பு எதிரியை தனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார்.

18. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததிலிருந்து எதிரியை சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் யாரும் பார்க்கவில்லை என்பது புலப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவில் எதிரி பற்றி தெரியாது என்று தான் கூறப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் நடந்து 15 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்தற்கான நியாமான காரணத்தையும் புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இவ்வழக்கின் எதிரியை இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியே அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் புகார் மனுவை காவல் நிலையத்தில் இருந்த ஏட்டையா எழுதியதாக அ.சா.1 கூறியுள்ளார். ஆனால் அ.சா.5 புகார் மனுவை யார் எழுதினார்கள் என்பது பற்றி தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார். மேற்படி சாட்சிகளே முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டு, இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்த புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி தான் குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரியின் மீதான சட்டப்பிரிவு 379 இதசவின் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 ஆன சுமார் 1 கிராம் எடையுள்ள இதய



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

மாடல் தங்க டாலருடன் கூடிய 2 பவுன் தங்க முறுக்கு செயின் ஒன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.27/2020 வழங்கப்பட்டு அதனை CRMP.No.43/2020 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான பொற்செல்வி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

21. எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் வருடம் மார்ச் மாதம் **06** ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>1. அரசுத் தரப்பு சாட்சிகள் –</u>**

அ.சா.1 – திருமதி.பொற்செல்வி

அ.சா.2 – திரு.ஜசக்ராஜதுரை

அ.சா.3 – திரு.வெள்ளைச்சாமி

அ.சா.4 – திரு.தமிழரசன்

அ.சா.5 – திரு.கனகராஜ்

அ.சா.6 – திரு.கருத்தப்பாண்டி

**<u>2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் –</u>**

அ.சா.ஆ.1 – புகார் மனு

அ.சா.ஆ.2 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.3 – எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.4 – அத்தாட்சி

அ.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.6 – வரைபடம்

அ.சா.ஆ.7 – படிவம் 91

**3. அரசு தரப்பு சான்று பொருள்** –

சா.பொ.1 – சுமார் 1 கிராம் எடையுள்ள இதய மாடல் தங்க டாலருடன் கூடிய 2 பவுன் தங்க முறுக்கு செயின் ஒன்று– (புகைப்படம்)

**4. எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்** –இல்லை.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |